சிலையொன்றும், சாலை பெயரும் அளவும் குறிக்கப்பட்ட கற்கள் மூன்றும் மாநில தொல்பொருள் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பானதாகக் குறிக்கத் தக்கவை இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்க் கற்களே ஆகும். அவைகளில் இரண்டில் 'விக்கிரம பாண்டியன் திருவீதி நாலாம் வகுப்பு' என்ற தொடரும் பாண்டியர் சின்னமும் உள்ளது. மற்றொன்றில் 'விக்கிரம பாண்டியன் திருவீதி ஆறாம் வகுப்பு' என்ற தொடரும் பாண்டியர் சின்னமும் உள்ளது. பாண்டியர் சின்னம் இருமீனும், நடுவில் செண்டும் கொண்ட அகப்பை உடையது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை சட்டக் கல்லூரி நூலகக் கட்டிடம்.

* வினா எண் 129—திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக் கல்லூரி நூலகத்திற்குப் புதியக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னை வியாசர்பாடியில் குடிநீர் குழாய்கள்.

* வினா எண் 130—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) சென்னை வியாசர்பாடி பகுதியில் குடிதண்ணீரோடு சாக்கடைத் தண்ணீரும் கலந்துவிட்டது என்பதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

(ஆ) அதற்கான காரணமென்ன என்பதைப்பற்றி கண்டுபிடிக்கப் பட்டனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு குடி தண்ணீரில் சாக்கடை நீர் கலக்காமல் தடுக்கப்பட்டது.

1979 நவம்பர் 7]

(ஆ) வியாசர்பாடியில் உள்ள மேல்பட்டி பொன்னப்ப முதலி தெருவும் பழனி ஆண்டவர் கோவில் தெருவும் சந்திக்கும் இடத்தில் போடப்பட்ட இரண்டு வார்ப்பு இரும்பு குழாய்களுக்கு இடையே உள்ள காரீயத்தால் ஆன இணைப்பு வெளியே வந்துவிட்டது. அதன் காரணமாக ஏற்பட்ட இடை வெளியின் மூலம் வெளிப்புறத்திலுள்ள அசுத்தநீர் குழாய்களுக்கு உள்ளே சென்றதால் இந்த நிலை ஏற்பட்டது. காரீயத்தை மறுபடியும் உருக்கி ஊற்றி புதிய இணைப்பு போடப்பட்டது.

(முற்பகல் 9-40)

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், உடனே தடுப்பதற்கான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்த அமைச்சரவர்களுக்கு நன்றி. இந்த சென்னை மாநகரில் பல பகுதிகளில் இதைப்போன்று ஒரு நிலை இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அதன் காரணமாகத்தான் சென்னை மாநகரில் உள்ள பலருக்கு திடீர் திடீரென்று கண்வலி, மஞ்சள்காமாலை போன்ற பலதரப்பட்ட வியாதிகள் உண்டாகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இத்தகைய வியாதிகளை, இந்த சென்னை மாநகரம் முழுவதும் பரிசீலனை செய்து, அவைகளைத் தடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கண்வலி ஏன் வருகிறது, மஞ்சள் காமாலை ஏன் வருகிறது என்று எனக்குத் தெரியாது; நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குத்தான் தெரியும். (குறுக்கீடு) எனக்குத் தெரியாது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோதண்டராமன் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது; பேசியும் பலன் இல்லை; இங்கே பதிவாகாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்படி ஏற்படும்போது தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கு மெட்ராஸ் மெட்ரோபோலிடன் வாட்டர் சப்ளை அண்டு ஸ்வரேஜ் போர்டு இருக்கிறது. அதன் மூலமாக சென்னையை சிங்கார சென்னையாக்க, இப்படி கழிவு நீர் எல்லாம் உள்ளே நுழைவதைத் தடுத்து, நீங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையிலே காரி யங்கள் செய்யப்படுவதற்கு முனைப்பாக நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னையைப்பற்றிய கேள்வியாக இருக்க வேண்டும்.

[1979 நவம்பர் 7

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்படிப் பட்ட தவறு நேர்ந்தவுடனே உடனடியாக அவர்களுக்குக் கீழே இருக்கிற வாட்டர் போர்டை அணுகச் சொல்கிறார்கள். நான் 5 நாட்களுக்கு முன்பு உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவந்தேன். ஓட்டேரி பகுதியில் பி அண்டு சி தொழிலாளர்கள் வாழும் இடத்தில் சுமார் 25 நாட்களாக, சாக்கடை நீர் குடிநீரில் புகுந்து, அந்தப் பகுதி மக்கள் தொல்லைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். அதிகாரிகளிடம் அதுபற்றி தெரிவித்தும் அவர்கள் கவனிக்க வில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு அமைச்சரவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வியாசர்பாடி பகுதியில் குடிதண்ணீரோடு சாக்கடை நீர் கலந்துவிட்டதைப் பற்றிய கேள்வி இது. சென்னையில் இருக்கிற யாரும் என்னிடம் நேரடியாக இந்தமாதிரியான குறை இருக்கிறது என்று சொன்னதாக ஞாபகம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குமேலாக என்னுடைய நண்பர். அவர் ஒரு தொலைபேசி மூலம் என்னிடம் சொல்லியிருந்தாலே போதும் I would have rushed to the spot. இனிமேலாவது அப்படிச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளச் சொல்கிறார்கள், வரவேற்கிறேன். பலமுறை அவருடைய பி.ஏ. விடம் சொல்லியிருக்கிறேன். மற்ற அமைச்சர்களின் பி.ஏ.விடம் சொன்னால் உடனடியாக தகவல் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றம் சொல்லக் கூடாது; உட்காருங்கள்.

•

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, இந்த வடிகால் பிரிவு வந்த பின்னால், சென்னை மாநகரில் வியாசர்பாடி மட்டுமல்ல; சென்னை மாநகர் முழுவதிலுமே கழிவு நீர் சரியாக அகற்றப்படுவதில்லை; சில்டர் எடுக்காத காரணத்தால் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு நிரம்பி, ரோடு முழுவதும் போகிறது. அடைப்புகளை அகற்ற தேவையான கருவிகள் கொடுப் பதில்லை என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள்: அதனால் வடிகால் அகற்றும் பணி சரியாக நடைபெறவில்லை. எனவே மீண்டும் இதை சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலேயே விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

1979 நவம்பர் 7]

அப்படிச் செய்தால்தான் சென்னை மாநகர் உருப்படியாக இருக்கும். இல்லை என்று சொன்னால் இதைச் சீர்திருத்த முடியாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. திருப்பிக் கொடுப்பது என் கையிலா இருக்கிறது ?

குனியமுத்தூர் கிராமத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி.

***வினா எண் 131—திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதி கோரி விண்ணப்பித்துள்ளார்களா ?

(ஆ) பீடித் தொழிலாளர்கள் சேமநல நிதியில் என்னென்ன நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பீடித் தொழிலாளர்களிடம் இருந்து வீட்டு வசதி கோரி விண்ணப்பம் ஏதும் அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் நல நிதியில் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி அளித்தல், வீட்டு வசதி, மனமகிழ் மன்றங்கள் அமைத்தல், கல்விச் சலுகைகள் அளித்தல் ஆகிய நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவ வசதியைப் பொறுத்த மட்டில் முதற்கட்டமாக மேலப்பாளையத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று ஒரு நடமாடும் மருத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்பட இருக்கிறது. மேலும் திருச்சி அல்லது வேலூரில் ஒரு மருந்தகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டம், பெருந்துறையில் ராமலிங்கம் காசநோய் நிலையத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியே 10 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய வசதிகளான வீட்டு வசதி, மனமகிழ் மன்றங்கள் அமைத்தல், கல்விச் சலுகைகள் ஆகியவற்றை அமுல்படுத்த பெங்களூரில் உள்ள சேம நல ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.